மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 62 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி கொடுக்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால் மாண்புமிகு, உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

பொன்விளைந்தகளத்தூர் ஏரியின் மண்கரையினை அணைக்கட்டாக்கும் திட்டம்

*வினா எண். 1003—திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு வட்டம்—பொன்விளைந்தகளத்தூர் ஏரி வெள்ளக் காலில் உள்ள மண்கரை ஆண்டுதோறும் உடைப்பெடுப்பதால் அணைக்கட்டாக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை

(ஆ) மற்றும் (இ) : இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் : தலைவர் அவர்களே, இந்த ஏரியின் மூலமாக 1,200 ஏக்கர் நஞ்சை நிலங்கள் இருபோக சாகுபடிக்குப்பயன்படுகிறது. இந்த ஏரிக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் செலவிட்டு சீரமைப்பு வேலை நடைபெற்றிருக்கிறது. இருந்தாலுங்கூட மண் கரையில் தொடர்ந்து 10 ஆண்டு காலமாக உடைப்பு ஏற்பட்டு வருகிறது. இதற்கு ஒரு சிறு தடுப்புச் சுவர் எழுப்பி, கல் அணையாகக் கட்டித் தேக்கினால் இந்த ஏரி வலுவடைவது மட்டுமல்லாமல் இந்த ஏரியின் உபரி நீரை ஏழு நீர்ப்பாசன ஏரிகள் பயன்படுத்துவதற்கான தண்ணீர் இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட நல்ல திட்டத்தை இந்த ஆண்டாவது எடுத்துச் செய்வதற்கு அரசு முயற்சிக்குமாஎன்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே மூலக்கேள்வியில் ஆண்டுதோறும் உடைப்பெடுப்பதால் அணைக்கட்டாக்கும் திட்டம் என்று இருக்கிறது; அதனால் இல்லை என்று சொன்னேன். இப்பொழுது இந்தத் துணைக்கேள்வியில் அந்தப் பகுதி தொடர்ந்து வெள்ளத்தின் காரணமாக உடைந்து போகாமல் இருக்க ஏதாவது தடுப்புச் சுவர் போலக் கட்ட முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து இப்பொழுது ஆய்வு செய்யச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறது. தோராயமாக நான்கைந்து இலட்சம் ரூபாய் ஆகும் என்ற தகவல் வந்திருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகு அந்த நடவடிக்கையை விரைவுபடுத்துவதற்கு அரசு முயற்சி செய்யும்.

1891 மே 6]

திரு. பு. கோ. ஆனூர். ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டாண்டுகளுக்கு முன்பு சுமார் 4,50,000 ரூபாய் அளவிற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு மதிப்பீடு பரிசீலனையில் இருப்பதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். இரண்டாண்டுக் காலமாகியும்கூட அந்த மதிப்பீடு நடைமுறைப்படுத்தப் படவில்லை. அந்த வேலை நடக்கவில்லை. ஆகவே, இந்த ஆண்டாவது அதைத் துரிதப் படுத்திச் செயல்படுத்துகின்ற உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, விரைவிலே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும்.

அகஸ் தீஸ்வரம், தோவாளை தாலுக்காக்களிலுள்ள குளங்கள்.

*வினா எண் 1004— திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் தோவாளை போன்ற தாலுக்காக்களில் 50 ஏக்கருக்கும் மேலாக விஸ்தீரணம் உள்ள குளங்கள் மண்ணால் நிறைந்து கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்த குளங்களை வெட்டி ஆழப்படுத்தி பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலம் சாகுபடியாக அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களில் உள்ள சில குளங்களில் தூர் சேர்ந்திருந்தாலும், எல்லாக் குளங்களும் வாய்க்கால் மூலம் ஆற்று நீரைப் பெறுவதால் இக் குளங்களில் தண்ணீர் வருடத்தில் எல்லா மாதங்களிலும் இருக்கும் எனவும் அதனால் இக்குளங்களின் கீழுள்ள ஆயக்கட்டுகளில் பாசன வசதி பெறாத நிலங்கள் இல்லை எனவும், சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். ஆற்று நீரைப் பெறுகின்ற குளங்கள் ஆகையால், தூர் அகற்றி மேம்படுத்தும் பணிகளை எடுத்துக் கொள்வதற்கான விதிமுறைகளின் கீழ் வரவில்லை. எனினும் குளங்களை மராமத்து செய்யும் பணி மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்திலுள்ள அனந்தனாறு பகுதிகள் முழுமையும் கடந்த இரண்டு முறை பயிர்கள் தண்ணீர் இன்றிக் கருகி விட்டன. சேனலில் தண்ணீர் வராத நேரத்தில் இந்தக் குளங்களில் தண்ணீர் இருந்தால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயிராகும். ஆதலால் இந்தக் குளங்களை ஆழப்படுத்த அரசு வேகப் பணிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.